BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# சவ்வாது மலைவாழ் இருளர்களின் தற்கால புழங்கு பொருட்கள்

வெ. நந்தகுமார்
முனைவர் பட்ட ஆய்வாளர், உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், த.உ.க. கலைக்கல்லூரி, கரந்தை, தஞ்சாவூர் – 613 002.
நெறியாளர்: முனைவர் ரா. கோடீஸ்வரி
தமிழ் உயராய்வு மையம், த.உ.க. கலைக்கல்லூரி, கரந்தை, தஞ்சாவூர் – 613 002.

**ஆய்வுச் சுருக்கம்**

சவ்வாது மலையின் இயற்கைச் சூழலில் வாழ்ந்து வரும் தொல்குடி மக்களான இருளர்களின் வாழ்வியலையும், அவர்தம் பண்பாட்டுப் படிநிலைகளையும் அவர்களின் ‘புழங்கு பொருட்கள்’ வழி இனவரைவியல் நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும். பாரம்பரியமாக வேட்டைச் சமூகமாக இருந்து, பின்னர் புன்செய் பயிர்களைப் பயிரிடும் உழவுச் சமூகமாக மாறி, தற்காலத்தில் நவீன சமவெளி உலகோடு இணைந்து வரும் இருளர்களின் இடைநிலை வாழ்வை இக்கட்டுரை விரிவாகப் பேசுகிறது. இல்லம், உணவு, ஆடை, சடங்கு, விவசாயம், தூய்மைப்படுத்துதல் மற்றும் தொழில் சார்ந்த புழங்கு பொருட்களின் வகைப்பாட்டின் வழி அவர்களின் சூழலியல் தகவமைப்பு இங்குக் கண்டறியப்பட்டுள்ளது. நவீனமயமாக்கலின் விளைவாக மண்பாண்டங்கள், மூங்கில் மற்றும் சுரைக்குடுவை போன்ற இயற்கைச் சாதனங்கள் நெகிழி மற்றும் அலுமினியப் பொருட்களாக உருமாறி வருவதையும்; அதே வேளையில் தேக்கிலை, உரல், உலக்கை, தொம்பை மற்றும் அகல் விளக்குகள் போன்ற பாரம்பரியப் பொருட்கள் இன்றும் அவர்களின் சடங்கு, மருத்துவம் மற்றும் அன்றாட வாழ்வில் எவ்வாறு தங்களின் அடையாளத்தைத் தற்காத்துக் கொள்கின்றன என்பதையும் இக்கட்டுரை விரிவாகத் தொகுத்துரைக்கிறது.

**திறவுச்சொற்கள்:**

புழங்கு பொருள், இருளர்கள், சவ்வாது மலை, பருப்பொருள் பண்பாடு, இனவரைவியல், வாழ்வியல் மாற்றம்.

## முன்னுரை

சவ்வாது மலை என்பது எண்ணற்ற இயற்கை வளங்களைத் தன்னுள் கொண்டு திகழும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மலைப்பகுதியாகும். இம்மலையின் இயற்கைச் சூழலில் வாழ்ந்து வரும் தொல்குடி மக்களான இருளர்கள், காடுகளுடனும் இயற்கையுடனும் இயைந்த மிக எளிய வாழ்வியல் முறையை மேற்கொண்டு வருகின்றனர். ஒரு குறிப்பிட்ட மனிதச் சமூகத்தின் வாழ்வியல் கூறுகளை, அவர்களின் நாகரிக வளர்ச்சியை மற்றும் பண்பாட்டுப் படிநிலைகளை மிகத் துல்லியமாக வெளிப்படுத்துவன அவர்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தி வரும் புழங்கு பொருட்களேயாகும். ‘புழங்கு பொருள்’ என்பது வெறும் பயன்பாட்டிற்கான சாதனம் மட்டுமல்ல; அது அச்சமூகத்தின் கூட்டு மனநிலை, அழகியல் உணர்வு, தொழில்நுட்ப அறிவு மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த தகவமைப்பைக் காட்டும் மிக முக்கிய காலக் கண்ணாடியாக விளங்குகிறது. சங்க இலக்கியங்கள் காட்டும் இயற்கை சார்ந்த தொல்வாழ்வின் எச்சங்களை இன்றும் சவ்வாது மலைவாழ் இருளர்களின் புழக்க வழக்கங்களில் காண முடிகிறது. முற்காலத்தில் தூய வேட்டைச் சமூகமாக இருந்து, பின்னர் காடுகளைத் திருத்தித் தினை, சாமை, கேழ்வரகு போன்ற புன்செய்ப் பயிர்களைப் பயிரிடும் உழவுச் சமூகமாக உருவெடுத்த இவர்கள், தற்காலத்தில் நவீன சமவெளி உலகோடு தங்களை வேகமாய் இணைத்துக் கொண்டு வருகின்றனர். இத்தகைய இடைநிலைச் சூழலில், அவர்களின் பாரம்பரிய இயற்கை சார்ந்த புழங்கு பொருட்களின் பயன்பாடு குறைந்து, நவீன செயற்கைப் புழங்கு பொருட்களின் ஊடுருவல் எவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பதையும், அச்சமூகத்தின் சடங்கியல் மற்றும் பண்பாட்டு நம்பிக்கைகள் புழங்கு பொருட்களின் வழி எவ்வாறு இன்றும் தற்காத்துக் கொள்ளப்படுகின்றன என்பதையும் ஓர் இனவரைவியல் நோக்கில் விரிவாக ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

**புழங்கு பொருள் – சொல் விளக்கம்**

தமிழ்ச் சூழலில் ‘புழங்கு பொருள்’ என்ற சொல் வடிவம் மிக ஆழமான மானுடவியல் மற்றும் சமூகவியல் பின்புலத்தைக் கொண்டதாகும். ‘புழங்கு’ என்னும் வினைச்சொல்லுக்கு வழங்குதல், நித்தம் பயன்படுத்துதல், கையாளுதல், ஒரு பொருளோடு தொடர்ச்சியான புழக்கத்தில் இருத்தல் என்று அகராதிகள் பொருள் தருகின்றன. மனிதன் தன் உயிர்வாழ்தலுக்காகவும், அன்றாட வாழ்வியல் தேவைகளுக்காகவும் இயற்கையிலிருந்தோ அல்லது தன் சொந்தத் தொழில்நுட்ப அறிவிலிருந்தோ உருவாக்கிப் பயன்படுத்தும் அனைத்துப் புறப்பொருட்களின் தொகுப்பே புழங்கு பொருட்களாகக் கருதப்படுகின்றன. மானுடவியல் மொழியில் இதனை ‘பருப்பொருள் பண்பாடு’ என்று அழைப்பர். மனித இனம் தோன்றிய காலம் முதல் இன்று வரை, அவனது நாகரிக வளர்ச்சியின் ஒவ்வொரு படிநிலையிலும் இப்பொருட்களே அவனது வாழ்வின் முதன்மைச் சாட்சிகளாக விளங்கி வருகின்றன.

**புழங்கு பொருள் குறித்த அறிஞர்களின் வரையறைகள்**

ஒரு சமூகத்தின் அக உலகச் சிந்தனைகள் எவ்வாறு புற உலகப் பொருட்களாக வடிவம் பெறுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள, இத்துறை சார்ந்த அறிஞர்களின் வரையறைகளை ஆராய்வது இன்றியமையாதது ஆகும். “மக்கள் தங்கள் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் அனைத்து வகையான பொருட்களும் புழங்கு பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன. புழங்கு பொருட்கள் காலத்திற்கு ஏற்ப மாறுபட்டு காணப்படுகின்றன. மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்கு ஏற்ப தொழில்நுட்பத்துடன் இன்று புழங்கு பொருட்கள் பெரும் மாற்றம் பெற்றுத் திகழ்கின்றன.”[1] இக்கருத்தானது, புழங்கு பொருட்கள் என்பவை தேக்கமுற்ற ஒரு பருப்பொருள் அல்ல, அவை மனிதச் சிந்தனையின் இயங்குதன்மைக்கு ஏற்பவும், காலத்தின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்பவும் தொடர்ச்சியான மாற்றத்திற்கு உள்ளாகக்கூடிய ஒரு நகரும் காரணி என்பதை வரையறுக்கிறது. மனிதனின் அத்தியாவசியத் தேவைகளே புழங்கு பொருட்களின் உருவாக்கத்திற்கு அடிப்படைப் புள்ளியாக அமைகின்றன. ஆரம்பக் காலத்தில் வெறும் பிழைப்பிற்கான கருவியாக இருந்த பொருட்கள், சமூக மாற்றத்திற்கு ஏற்பவும் உலகமயமாக்கலின் விளைவாகவும் தங்களின் வடிவத்தையும் பயன்பாட்டுத் தன்மையையும் தொடர்ச்சியாக மாற்றிக் கொள்கின்றன. இதனைச் சவ்வாது மலை இருளர்கள் தங்களின் வேட்டைக் கருவிகளிலிருந்து தற்கால விவசாயக் கருவிகளுக்கு மாறியுள்ள இடைநிலை மாற்றத்தின் வழி நாம் மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

பழங்குடி மக்களுக்கும் அவர்கள் பயன்படுத்தும் புறப் பொருட்களுக்கும் இடையிலான உறவு என்பது வெறும் நுகர்வு சார்ந்தது மட்டுமல்ல; அது ஒரு வாழ்வியல் பிணைப்பு ஆகும். தற்கால மானுடவியல் ஆய்வுகள் இந்த உறவை இன்னும் விரிவாக விளக்குகின்றன.“நம்மைச் சுற்றியுள்ள புற உலகம் முழுவதும் பொருள் சார்ந்ததுதான். நாம் பொருளோடு உறவாட நேரம் கிடையாது, பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது முன்னிலை பெற்று விட்டது.”[2]

மானுடவியல் அறிஞர் பக்தவத்சல பாரதி அவர்கள், தற்கால மனித வாழ்வு எவ்வாறு பொருட்களின் நுகர்வோடு மிக இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது என்பதையும், நுகர்வுப் பண்பாடு மனிதனைப் பொருட்களின் உலகிற்குள் எவ்விதம் ஆழ்த்தியுள்ளது என்பதையும் இக்கூற்றின் மூலம் பதிவு செய்கிறார். நவீன நுகர்வுப் பண்பாடு என்பது மனிதனைப் பொருட்களின் அடிமையாக்கிக் கொண்டிருக்கிறது என்ற தத்துவார்த்த உண்மையை இங்குக் காண முடிகிறது. காடுகளுடனும் இயற்கையுடனும் மட்டுமே உணர்வுப்பூர்வமாக உறவாடி வந்த சவ்வாது மலை இருளர் போன்ற தொல்குடிகள், இன்று சமவெளிப் பண்பாட்டின் நவீன செயற்கைப் பொருட்களின் ஊடுருவலால், தங்களை அறியாமலேயே ஒரு பொருள்சார் நுகர்வு உலகிற்குள் தள்ளப்பட்டு வரும் சமூக யதார்த்தத்தை இக்கருத்து நமக்கு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

**தத்துவார்த்தப் பார்வையும் பண்பாட்டுப் பிணைப்பும்**

புழங்கு பொருட்கள் என்பவை வெறும் அசேதனப் பொருட்கள் அல்ல; அவை ஒரு சமூகத்தின் அழகியல், ஆன்மீகம், சடங்கு மற்றும் குறியீட்டு விழுமியங்களைத் தங்களுக்குள் சுமந்து நிற்பவை ஆகும். தமிழ் மரபில் பொருள் சார் வாழ்வின் முக்கியத்துவத்தைத் தெய்வப்புலவர் திருவள்ளுவரும் மிக அழகாகத் தத்துவப்படுத்துகிறார்.

*“அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள்இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு”[3] (குறள் – 247)*

திருவள்ளுவர் இக்குறட்பாவின் வழி, ஒரு மனிதன் மண்ணுலகில் தன் புற வாழ்வைச் செம்மையாகவும் தற்சார்புடனும் நடத்துவதற்குப் பொருள்சார் புழக்கமும் பொருளாதாரமும் எத்துணை இன்றியமையாதது என்பதைத் தெளிவுபடுத்துகிறார். ஆன்மீக அல்லது அறநெறி சார்ந்த உன்னத நிலைக்கு ‘அருள்’ எவ்வாறு அடிப்படையோ, அதுபோல மண்ணுலகில் மனிதன் தன் இருப்பையும் சமூகத் தகுதியையும் தக்கவைத்துக் கொள்ளப் புறப்பொருள் சார் வாழ்வு இன்றியமையாததாகிறது. சவ்வாது மலை இருளர்கள் தங்களின் அடிப்படை வாழ்வாதாரத்திற்காகவும், காடுகளில் தங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் பல்வேறு இயற்கை சார்ந்தப் புறப்பொருட்களைச் சார்ந்து நிற்பதை இத்தத்துவப் பார்வை நமக்கு உணர்த்துகிறது.

பண்பாடும் புழங்கு பொருளும் நாணயத்தின் இரு பக்கங்களைப் போல ஒன்றோடொன்று பிரிக்க முடியாதவாறு பிணைந்துள்ளன என்பதை மானுடவியல் அறிஞர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். “பொருளும் பண்பாடும் நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவை. நெருக்குநெரித்தாரைப் போன்ற மிகக்குறைந்தபட்ச வரையறையாகச் சொன்னால் பாட்டின் கண்ணாடி புழங்குபொருள் என்று கூறுகிறார் பக்தவத்சல பாரதி.”[4] ஒரு சமூகத்தின் கண்ணுக்குத் தெரியாத அகப்பண்பாட்டை வெளியில் காட்டும் மிகத் தெளிவான புறக்கண்ணாடியாக அவர்கள் பயன்படுத்தும் புழங்கு பொருட்களே அமைகின்றன என்பதை மானுடவியல் ஆய்வுகள் இதன் மூலம் நிறுவுகின்றன. ஒரு குறிப்பிட்ட இனக்குழுவின் வரலாறு, கலைத்திறன், சடங்கியல் நம்பிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த தொழில்நுட்ப அறிவு அனைத்தும் அவர்கள் உருவாக்கும் மற்றும் கையாளும் புழங்கு பொருட்களிலேயே அடியோட்டமாகப் புதைந்துள்ளன. எனவே, ஒரு பண்பாட்டைப் புரிந்து கொள்வதற்குச் சான்றாதாரமாக விளங்குவது அந்த இனக்குழுவின் புழங்கு பொருட்களே ஆகும். சவ்வாது மலை இருளர்களின் இல்லங்களில் காணப்படும் உரல், உலக்கை, தொம்பை, தேக்கிலை போன்ற புழங்கு பொருட்கள் வெறும் பயன்பாட்டுப் பொருட்கள் அல்ல; அவை அவர்களின் தொன்மையான இன அடையாளத்தின் குறியீடுகள் ஆகும்.

**புழங்கு பொருட்களின் வகைப்பாடு**

சவ்வாது மலைவாழ் இருளர் சமூகத்தின் ஒட்டுமொத்த வாழ்வியலையும், அவர்தம் சூழலியல் தகவமைப்பையும் புரிந்து கொள்வதற்கு அவர்கள் பயன்படுத்தும் புழங்கு பொருட்களின் வகைப்பாடு முதன்மையான சான்றாக அமைகிறது. இருளர்கள் தங்களின் அன்றாடத் தேவைகள், தொழில் நுட்பங்கள், சடங்கு முறைகள் மற்றும் உணவுப் பழக்கவழக்கங்களின் அடிப்படையில் பல்வேறு வகையான புழங்கு பொருட்களைத் தங்களின் வாழ்வில் இணைத்துள்ளனர். இல்லம் சார்ந்த பயன்பாட்டிற்கு வாழையிலை, தேக்கிலை, மூங்கில், சுரைக்குடுவை போன்ற இயற்கைச் சாதனங்களையும், உரல், உலக்கை, அம்மி, ஆட்டுக்கல், முறம், சல்லடை மற்றும் தானியங்களைச் சேமிக்கும் தொம்பை போன்ற கருவிகளையும் இவர்கள் பயன்படுத்துகின்றனர். இவர்களின் உணவு மற்றும் மருத்துவத் தேவைகளை மரவள்ளிக்கிழங்கு, காட்டுக்கிழங்கு, மாவலிக்கிழங்கு, பண்ணைக்கீரை, மணத்தக்காளி, முருங்கைப்பூ, பலாப்பழம், மூங்கிலரிசி மற்றும் காடுகளிலிருந்து பெறப்படும் தூய தேன் போன்ற இயற்கை சார்ந்த புழங்கு பொருட்கள் நிறைவு செய்கின்றன.

சமூக அடையாளமாகவும் பாதுகாப்பு அரணாகவும் விளங்கும் ஆடை மற்றும் அணிகலன்களில் வேட்டி, சட்டை, சேலை, தாவணி போன்ற உடைகளும், கவரிங் நகைகள், வெள்ளி வளையல்கள், மணிகள் மற்றும் தீய ஆவிகளிடமிருந்து காக்கும் தாயத்துகளும் முக்கிய இடம் பெறுகின்றன. இவர்களது படுக்கையறைச் சூழலில் கயிற்றுக் கட்டில், குளிர்காலக் கம்பளி மற்றும் குழந்தைகளுக்கான சேலைத் தொட்டில் ஆகிய புழங்கு பொருட்கள் பயன்பாட்டில் உள்ளன. வழிபாட்டு மரபுகளில் மஞ்சள், மூங்கில் கொடிமரம், புற்றுமண், நேர்த்திக்கடனுக்கான இரும்புச் சூலம், வேல் மற்றும் சாமிக்கூடை போன்ற சடங்கு சார் பொருட்கள் முதன்மை பெறுகின்றன. மேலும், வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் விவசாயம் மற்றும் தொழில் சார்ந்த தேவைகளுக்குக் கலப்பை, அரிவாள், மண்வெட்டி, கதிர் அறுக்கும் அரிவாள், வேட்டை வலைகள், உண்டிவில், தேனெடுக்கும் கருவிகள் ஆகிய புழங்கு பொருட்களையும், தூய்மைப் பணிகளுக்கு மஞ்சம்புல்லால் செய்யப்படும் பூந்தொடப்பம், தென்னந்தொடப்பம், ஈச்சந்தொடப்பம் ஆகியவற்றையும் இருளர்கள் பரவலாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

**இல்லம் சார்ந்த புழங்கு பொருட்களும் தற்காலப் பயன்பாடும்**

இருளர்களின் இல்லங்கள் பெரும்பாலும் காடுகளில் எளிதாகக் கிடைக்கும் இயற்கை மூலப்பொருட்களைக் கொண்டே பாரம்பரியமாகக் கட்டமைக்கப்படுகின்றன. எனினும், தற்காலப் பொருளாதார மாற்றங்கள் மற்றும் நவீனமயமாக்கலின் விளைவாக இவர்களது இல்லப் பொருட்களில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. உணவைச் சமைக்கவும் பாதுகாக்கவும் இருளர்கள் பாரம்பரியமாகப் பயன்படுத்தி வந்த மண்பாண்டங்கள், இலைகள் மற்றும் மூங்கில் கலன்களின் பயன்பாடு இன்று நெகிழி மற்றும் அலுமினியப் பொருட்களாக உருமாற்றம் பெற்றுள்ளன. ஆயினும், சடங்கு சார்ந்த நிகழ்வுகளில் இன்றும் இவர்களது பாரம்பரியக் கலன்களே முன்னிலை பெறுகின்றன.

சவ்வாது மலைக் காடுகளில் தேக்கு மரங்கள் அதிகம் உள்ளதால், வயல்களில் வேலை செய்யும் போதும், காடுகளுக்குக் கிழங்கு தோண்டச் செல்லும் போதும் உணவைக் கட்டிச் செல்ல இன்றும் தேக்கிலையையே பயன்படுத்துகின்றனர். தேக்கிலையில் உணவை வைத்தால் அது நீண்ட நேரம் கெடாமல் இருக்கும் என்ற பாரம்பரிய அறிவியல் அறிவு இவர்களிடம் காணப்படுகிறது. மேலும், இவர்களின் சமூக வழக்கப்படி திருமணத்திற்கு முந்தைய நாள் பன்றிக்கறி விருந்து பரிமாற இன்றும் தேக்கிலையே பயன்படுத்தப்பட்டு வருகிறது. கால்நடைகளுக்கு நோய் ஏற்படும் பொழுது, மூங்கிலால் செய்யப்பட்ட உறிஞ்சு குழல் போன்ற அமைப்பின் வழியாக மருந்துகளை உட்செலுத்தும் கால்நடை மருத்துவ முறையையும், அடர்ந்த காட்டுப்பகுதிகளில் இன்றும் தேன் சேகரிப்பதற்கும், தண்ணீரைக் கொண்டு செல்வதற்கும் காய்ந்த சுரைக்குடுவையைப் பயன்படுத்தும் மரபையும் இவர்களிடம் காண முடிகிறது.

**அரைவை மற்றும் சேமிப்புக் கருவிகள்**

நெல் மற்றும் சிறுதானியங்களைக் குற்றுவதற்கும் மாவு இடிப்பதற்கும் பலா மரத்தினால் செய்யப்பட்ட உரலையும், கருங்காலி மரத்தினால் செய்யப்பட்ட உலக்கையையும் இருளர்கள் பயன்படுத்துகின்றனர். மின்சார அரவை இயந்திரங்கள் தற்காலத்தில் பரவலாக வந்தபோதிலும், உரலில் இடித்துச் சமைக்கும் உணவே சுவையானது என்றும், சத்துக்கள் அழியாதது என்றும் இம்மக்கள் நம்புகின்றனர். மேலும், பண்பாட்டு ரீதியாகப் பெண்கள் பூப்படையும் சடங்குகளில் தீய சக்திகளிடமிருந்து காக்கக் குடிசையின் முன் உலக்கையை வைக்கும் சடங்கு இன்றும் தொடர்கிறது. தானியங்களை நீண்ட காலம் பாதுகாப்பாகச் சேமிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு பெரிய உருண்டை வடிவக் கலன் 'தொம்பை' ஆகும். மூங்கிலால் பின்னப்பட்டு, அதன் மேல் செம்மண்ணும் மாட்டுச் சாணமும் பூசப்பட்டு இது தயாரிக்கப்படுகிறது. இதில் 5 முதல் 10 மூட்டைகள் வரையிலான தானியங்களை வண்டுகள் மற்றும் பூச்சிகளின் அரிப்பின்றிப் பாதுகாக்க முடியும். எனினும், யானைகள் உணவு தேடி ஊருக்குள் நுழையும் போது இத்தகைய பாரம்பரியத் தொம்பைகளை உருட்டி உடைத்துச் சேதப்படுத்துவது தற்காலக் களஆய்வில் அறியப்பட்ட முக்கிய சமூகப் பிரச்சனையாகும்.

**முடிவுரை**

சவ்வாது மலைவாழ் இருளர்களின் புழங்கு பொருட்கள் குறித்த இத்தகு விரிவான இனவரைவியல் ஆய்வு, ஒரு பழங்குடிச் சமூகத்தின் பருப்பொருள் பண்பாடு என்பது வெறும் நுகர்வுச் சாதனம் மட்டுமல்ல, அது அச்சமூகத்தின் கூட்டு மனநிலை, சூழலியல் தகவமைவு மற்றும் மரபுவழித் தொழில்நுட்ப அறிவின் வாழும் சாட்சியாகத் திகழ்கிறது என்பதை மிகத் தெளிவாக நிறுவுகிறது. சமவெளி மனிதர்களின் தொடர்பாலும் நவீனப் பொருளாதார மாற்றங்களாலும் இருளர்களின் அன்றாட இல்லப் புழங்கு பொருட்களில் நெகிழி மற்றும் அலுமினியத்தின் ஊடுருவல் வேகமாய் நிகழ்ந்துள்ள போதிலும், அவர்தம் அக வாழ்வியல் நம்பிக்கைகளும் சடங்கியல் கூறுகளும் பாரம்பரியப் புழங்கு பொருட்களோடு இன்றும் பிரிக்க முடியாதவாறு பிணைந்துள்ளன. உணவைப் பாதுகாக்கும் தேக்கிலை, மூங்கில் மற்றும் சுரைக்குடுவைகளின் பயன்பாடும், உரல்-உலக்கை சார்ந்த அரைவை முறைகளும் இருளர்களின் உணவு சார்ந்த மரபு வழி அறிவியல் அறிவையும், தற்சார்பு மருத்துவ விழுமியங்களையும் இன்றும் பறைசாற்றுகின்றன.

தானியங்களை நீண்ட காலம் பாதுகாக்கும் 'தொம்பை' போன்ற பாரம்பரியக் கருவிகள் பூச்சிகளின் அரிப்பிலிருந்து தானியங்களைப் பாதுகாத்த போதிலும், தற்காலக் காடழிப்பினால் உணவு தேடி வரும் யானைகள் அவற்றைச் சேதப்படுத்துவது பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தைச் சிதைக்கும் சமூக யதார்த்தமாக மாறியுள்ளது இவ்வாய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், கார்த்திகை தீப அகல் விளக்கு மரபுகள் மற்றும் பூப்புச்

சடங்குகளில் முன்னிறுத்தப்படும் உலக்கையின் பயன்பாடு ஆகியவை, புழங்கு பொருட்கள் என்பவை வெறும் பயன்பாட்டு எல்லைகளைத் தாண்டி, அச்சமூகத்தின் ஆன்மீக மற்றும் அமானுஷ்யப் பாதுகாப்பு அரணாகத் திகழ்கின்றன என்பதை உறுதி செய்கின்றன. சுருக்கமாகக் கூறின், சவ்வாது மலை இருளர்களின் புழங்கு பொருட்கள் கால மாற்றத்திற்கு ஏற்பத் தங்களின் வடிவங்களிலும் மூலப்பொருட்களிலும் நவீன மாற்றங்களைச் சந்தித்து வந்தபோதிலும், அவர்தம் தனித்துவமான இன அடையாளத்தின் குறியீடாகவும், காடு சார்ந்த தொல்வாழ்வின் எச்சங்களாகவும் இன்றும் விளங்குகின்றன என்பது இவ்வாய்வின் வழித் துணியப் பெறும் முடிபாகும்.

**துணைநூல் பட்டியல்**


1. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல், அடையாளம், திருச்சி, 2003.
2. பக்தவத்சல பாரதி, பருப்பொருள் பண்பாடு: தமிழகப் புழங்குபொருட்கள் ஓர் ஆய்வு. எதிர் வெளியீடு, பொள்ளாச்சி, 2012.
3. பரிமேலழகர்(உரை). திருக்குறள் மூலமும் உரையும். சாரதா பதிப்பகம், சென்னை, 2015.
4. பழனிசாமி, இரா. தமிழகப் பழங்குடிகளின் புழங்குபொருள் பண்பாடு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2018


*****